# விவசாய தொழில்நுட்பத் தகவல்

**விவசாய தொழில்நுட்ப தகவல்களை விவசாயிகளிற்கு மிக விரைவாக வழங்கும் ஒரு கையேடு.**

**விவசாயத் திணைக்களத்தின் தேசிய விவசாய தகவல், தொடர்பாடல் நிலையத்தின் வெளியீடு.**

**தொழில்நுட்ப பிரசுரம் இலக்கம் 44 - 2021 ஜுலை**




பயிர்ச் செய்கை போகம் ஆரம்பிப்பதற்கு முன்பே, பழைய நெல் விவசாயி வயலுக்குச் சென்று ஆரம்ப நிலப் பண்படுத்தலைத் தொடங்கினார். செய்கையை தொடங்குவதற்கு சில வாரங்களுக்கு முன்பு தொடங்கும் இந் நடைமுறையின் காரணமாக, நெல் வயலில் களைக் கட்டுப்பாடும் சிறப்பாக மேற்கொள்ளப்படுகின்றது. பின்னர் தோன்றிய களைகள் குறைவாகவே இருந்தாலும் வயலின் அனைத்து விவசாயிகளின் கூட்டணியினால் களைகளைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் இருக்கவில்லை. இருப்பினும், சந்தையில் இரசாயன களைநாசினிகளின் வருகையால், அதன் இலகுவான பாவனையால் ஈர்க்கப்பட்ட விவசாயி அதற்காக சூழலை அடமானம் வைத்தார். ஆரம்பகால களைநாசினிகள் சில சூழலிற்குப் பொருந்தாத தன்மையால் பின்னர் பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டன. சரியான காலத்தில் மழைக் கிடைக்காமை, பாசன நீரை சரியான நேரத்தில் வெளியிட தவறியமை போன்ற காரணங்களினால் கடந்த காலங்களில் விவசாயி செய்ததைப் போல் நேர காலத்துடன் நிலத்தை தயார் செய்யும் சிரமத்தையும் நாம் நிராகரிக்கக்கூடாது. அத்தகைய வாய்ப்பை முறியடிப்பதில் ஒரு களைநாசினியை வழங்குவதற்கான ஆதரவும் முக்கியத்துவம் வாய்ந்தது.




இருப்பினும், சூழல் நேய களைக் கட்டுப்பாட்டு முறைகள் முற்றிலுமாக அகற்றப்பட்டு இரசாயன களைநாசினிகளை மட்டுமே நம்பியிருக்கும் விவசாயத்தை தடுக்க வேண்டும். சூழலுக்கு தாங்க முடியாத அளவில் செயற்கை இரசாயனப் பொருட்களை விசுறுவதனால் இது நிகழ்கிறது. இதன் விளைவாக, இரசாயன களைநாசினிகளைப் பயன்படுத்தாத ஒரு விவசாயத்தை நோக்கி நாம் நகர்கின்றோம். எவ்வாறாயினும், விவசாயியால் மட்டுமே கட்டுப்படுத்த முடியாத நிலைமைகளை எதிர்கொண்டு நிலத்தை ஆயத்தப்படுத்துவதில் ஏற்படும் தாமதத்தால் உருவாகும் பாதிப்பை அகற்றுவதற்கு சூழல் நேயமான தாவர பொருட்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் களைநாசினிகளைப் பயன்படுத்துவதில் அதிக கவனம் செலுத்துகின்றோம். இது நீண்டகாலத்திற்கு முன் விவசாயத் திணைக்களத்தினால் பெலாகொனிக் அமிலம் (57% EC) என சிபாரிசு செய்யப்பட்டது. இது நிலப் பண்படுத்தலுக்கு முன் நிலத்திற்குப் பயன்படுத்தப்படும் ஒரு தொடுகை செயற்திறன் கொண்ட, அனைத்து களைகளையும் அழிக்கும் ஒரு களைநாசினியாகும்.

இது பலவீனமான சேதன அமிலமாகும். மேலும் இது தாவரப் பொருட்களிலிருந்து வேறாக்கப்படுவதால் சேதன களைநாசினி எனவும் அழைக்கப்படுகின்றது. இதன் மூலம் களைகளின் உச்சியரும்பு அழிக்கப்படுவதால், இழையங்களில் சேமிக்கப்படும் நீரை தக்கவைக்க முடியாத களைகள் உலர்வடைந்து இறக்கின்றன. இதனால்தான் பயன்படுத்தப்பட்ட பகுதியில் உள்ள தாவரங்கள் எரிந்த தன்மையைக் காட்டுகின்றன.



திரவத் தெளிப்பானை கழுத்தில் தொங்கவிட்டு இரசாயன களைநாசினி போத்தலுடன் வயலுக்குச் செல்லும் விவசாயிற்கு பெலாகொனிக் அமிலத்தைப் பயன்படுத்துவதன் மூலம் முன்னைய பழக்கத்தை மாற்ற வேண்டும். ஏனெனில் ஒப்பீட்டளவில் இது அதிக அளவு தேவைப்படுகின்றது. அதிகளவான களைகள் காணப்படும் ஒரு வயலுக்கு ஒரு ஹெக்டெயாரிக்கு சுமார் 15 லீற்றரும், குறைவான களைகளைக் கொண்ட வயலிற்கு ஒரு ஹெக்டெயாரிற்கு 9 - 12 லீற்றர் தேவைப்படுகின்றது என பத்தலகொட நெல் ஆராய்ச்சி நிறுவனத்தின் களையியல் நிபுணர் ஆர்.எம்.யூ.எஸ். பண்டார அவர்கள் கருத்து தெரிவித்தார்.

**"களைநாசினியைப் பயன்படுத்தி 3 - 4 நாட்களுக்குப் பின், நிலத்தை ஆயத்தப்படுத்தலாம். களைநாசினியினால் வேர் அமைப்பு இறக்காமையினால் பொதுவாக ஒரு வாரத்தின் பின் உலர்வடைந்த நாற்று மீண்டும் எழும்பும். எனவே முன்பு விவசாயிகளிடையே இந்த அமிலம் பிரசித்தியடையவில்லை. அத்தோடு செயற்திறன் கூடிய இரசாயன களைநாசினிகள் சந்தையில் காணப்படுகின்றமை இதற்கு மற்றொரு காரணமாகும். அவற்றை சிறியளவில் பயன்படுத்துவதனால் இலகுவாக பிரசித்தியடைந்தது. ஆனால் இப்போது நிலைமை வேறுபட்டது. விவசாயிகள் மாற்று களைநாசினியைத் தேடினர். சேதன பீடைநாசினியை அறிமுகப்படுத்தும் சூழலுக்கு பெலாகொனிக் அமிலம் பொருத்தமாவது இதனாலாகும்."** என திரு பண்டார அவர்கள் குறிப்பிட்டார். இத் தொடுகை களைநாசினியினால் அதிக களைகளுக்கு, இலைகள் நன்கு நனையும் படி களைநாசினியைப் பயன்படுத்துவதன் மூலம் நல்ல பலன்களைப் பெற முடியும் என்று அவர் கூறுகின்றார்.

**பிரதியாக்கம்** :- சனத் எம். பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர், தேசிய விவசாயத் தகவல், தொடர்பாடல் நிலையம், கன்னொறுவை

**தொழில்நுட்ப உதவி :-** ஆர்.எம்.எச்.யூ. பண்டார, உதவி விவசாயப் பணிப்பாளர் (ஆராய்ச்சி), நெல் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிறுவனம், பத்தலகொட.

(தற்போது இவ் வள உதவியாளர் மலேசியா **University Putra Malaysia** இல் முது கலை பட்டப் படிப்பை மேற்கொள்கின்றார்)

**தமிழாக்கமும், கணணி வடிவமைப்பும் :-** லிசோதா செல்வராஜ்

மேற்பார்வை மற்றும் ஆலோசனை : டப்ளிவ்.எல். ஹிரான் பீரிஸ் (பணிப்பாளர் - தகவல், தொடர்பாடல்)
ஐ.எஸ்.எம். ஹலீம்தீன் (உதவி விவசாயப் பணிப்பாளர்)